# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : STC 147-2025 (419/2024) |
| Deposition of witness for | Prosecution : LW 1 - PW 1 |
| | Defence : |
| | Court : |
| Name : குமரவேல் | Father's Name: ஆதிமூலம் |
| | Husband Name: |
| Village : எரும்பூண்டி | Taluk : |
| | Calling : |
| | Age : 61 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2026

எதிரி ஆஜர்.

சாட்சியின் அடையாளம் கீழ்பென்னாத்தூர் காவல் நிலைய தலைமைக் காவலர் திரு. விஜயக்குமார் அவர்கள் மூலம் உறுதிசெய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை</u> :

நான் தற்போது எரும்பூண்டி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். 05.12.2021ம் தேதி எனது மகன் மாலை 05.00 மணிக்கு மிலிட்டரியில் இருந்து எங்கள் ஊரான எரும்பூண்டிக்கு வருவதற்காக கீழ்பென்னாத்தூருக்கு வந்தார். எங்களுக்கு போன் செய்து வந்துவிட்டதாக சொன்னதால் கீழ்பென்னாத்தூருக்கு பல்சர் வண்டியை எனது பேரன் ஜெய்சிம்மன் பல்சர் வாகனத்தை கீழ்பென்னாத்தூருக்கு கொண்டு வந்து அந்த பல்சர் வாகனத்தை கார்த்தி ஓட்டவும் ஜெய்சிம்மன் பின்னால் அமர்ந்துக்கொண்டு வீட்டிற்கு வரும் வதற்காக பென்னாத்தூருகக்கு அருகே உள்ள கன்னமார் கோவில் அருகே வரும்போது எனது மகனுக்கு எதிரே வந்த புல்லட் வாகனத்தில் வந்த முருகன் என்பவர் எனது மகன்

ஓட்டிவந்த வாகனத்தின் மீது இடித்துவிட்டார். அதில் எனது மகன் கார்த்திக்கு தலை, கை, நெற்றி, கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டுவிட்டது. மேற்படி முருகன் ஓட்டிவந்த வாகனத்தின் எண். TN B 2000 ராயல் என்பீல்டு ஆகும். அதன் பின்னர் ஆம்புலென்ஸ் மூலமாக எனது மகன் கார்த்திக் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைப் பார்த்து பின்பு அங்கிருந்து பெங்களூருவில் இருந்த மிலிட்டரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கா சென்றுவிட்டார். மேற்படி விபத்தை ஏற்படுத்திய நபர் முருகன் அவருடைய ஊர் பென்னாத்தூர் ஆகும். பின்னர் நான் 7ம் தேதி கீழ்பென்னாத்தூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னதுதான். மேற்படி புகார் **அ.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>குறுக்குவிசாரணை</u>

விபத்து நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் நான் எரும்பூண்டி கிராமத்தில் இருந்தேன் என்றால் சரிதான். விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது மகன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது தான் நான் அவரைச் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். திருவண்ணாமலை அரசு மருத்துவமையில் எனது மகன் எத்தனை நாள் சிகிச்சைப் பெற்றார் என்றால் ஒருநாள் சிகிச்சையில் இருந்தார். எனது மகன் புகார் வாக்குமூலம் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்றால் நான்தான் எழுதவில்லை

எனது வழக்கறிஞர் எழுதிக்கொடுத்தார். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என்றால் நான் சொல்ல சொல்ல எனது வழக்கறிஞர் எழுதினார். நான் சொல்ல சொல்ல வழக்கறிஞர் எழுதினார் என்று எந்த வாசகமும் புகாரில் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஜெய்சிம்மன் ஓட்டிவந்த வாகனத்தின் எண் எனக்கு தெரியுமா என்றால் TN 25 5158 ஆகும். மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்து எனது மகன் மீது விபத்து ஏற்படுத்திய நபரின் பெயரை யாரிடம் நான் விசாரித்து தெரிந்துக்கொண்டேன் என்றால் அக்கம்பக்கம் விசாரித்ததில் சொன்னார்கள் சொன்னவர் பெயர் எனக்கு தெரியாது. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை யாரோ ஒரு நபர் ஓட்டிவந்த வாகனத்தின் மூலமாகத்தான் எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்திற்கும் ஆஜர் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து நஷ்ட ஈட பெறுவதற்காக இந்த ஒரு பொய்யான புகாரை வழக்கறிஞர் மூலமாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்